

# SOUNDHARYAM
# சௌந்தர்யம்

## Proceedings
(ஆய்வடங்கல்)

இந்து தமிழ் கலாச்சார சங்கம்
Hindu Tamil Cultural Association
Reg Charity: 1143043



# SOUNDHARYAM
# சௌந்தர்யம்
## Proceedings
(ஆய்வடங்கல்)

இந்து தமிழ் கலாச்சார சங்கம்
Hindu Tamil Cultural Association
Reg Charity: 1143043

Published:

June 2017

Publishers:

Hindu Tamil Cultural Association (Enfield)

61-69 Church Lane, Edmonton,

London N9 9PZ, UK

© Authors

Editorial Board:

R. Kamalanatha Kurukkal

S. Padmanaban

S. J. Fatimaharan

N. Sivanathan

R. Pathmanaba Iyer

P. Kailayapathivagan

Layout & Design:

R. Mathusuthan

Kilvelur B. Raamnaathan

P. Kabilan Sarma

Printers:

J R Print

61, Hoe Street, Walthamstow,

London E17 4QR

ISBN: 978-0-9957014-0-3

# இந்து நாகரிக ஆய்வுப்புலத்தில் மேலைத் தேசத்தவரின் ஆய்வுமுனைப்புகள் *H.T. கோல்புறூக்கை மையப்படுத்திய நோக்கு*

ச. முகுந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்

**அறிமுகம்**

ஆங்கிலேயரின் வருகையையும் காலனித்துவத்தின் இயங்குவிசைகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவிய இந்து நகாரிகத்தின் செல்நெறிகளில் புதிய மடைமாற்றத்தினை ஏற்படுத்தின.

அந்த வகையில் நிகழ்ந்த சில சாதகமான விளைவுகளில் பிரதானமாகக் குறிப்பிடத் தக்கது இந்தியாவில் (Indology) மற்றும் கீழைத்தேசவியல் (Oriental studies) சார்ந்த ஆய்வுச் செயற்பாடுகளில் ஐரோப்பிய அறிஞர்கள் முனைப்புக் கொண்டமையாகும்.

வேதங்கள், புராண இதிகாசங்கள், தர்ம சாஸ்திரங்கள் உள்ளிட்ட இந்த சமய இலக்கிய மூலங்கள் பல இவர்களின் செயற்பாடுகளால் அச்சுரவாகின. ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. விரிவுரை செய்யப்பட்டன. ஆய்வுக் கட்டுரைகளுக்குத் கருப்பொருளாயின. இந்து நாகரிக மூலங்கள் குறித்த தொல்லியலாய்புகள், கால ஆராய்ச்சிகள், பண்பாட்டினை ஆய்வுகள், சமய ஒப்பாய்வுகள் என்பன நடந்தேறின. அகராதிகள் உருவாகின. சொற்பிறப்பியல் கால்கோள் ஆயின். மொத்தத்தில் உலகின் தொல்சீர் நாகரிகங்கள் என மேலைத்தேச அறிவுலகத்தால் அதுவரை காலமும் நம்பப்பட்டு வந்த கிரேக்க, உரோம, பாரசீகப் பண்பாடுகளுக்கு நிகராக இன்னுமொருபடி உயர்வாக இந்து நாகரிகம் வேரூன்றி விழுதெறிந்துள்ளது என்பதனை ஆய்வறிவியல் ரீதியாக உலகம் இறிந்து கொள்ளத் தலைப்பட்டது.

இதற்கு துணை செய்தவர்களில் மக்ஸ் முல்லர், சேர் வில்லியம்ஸ் ஜோன்ஸ், கீர்த் மொனியர் வில்லியம்ஸ், H.T. கோல்புறூக், H.H. வில்சன், வின்ரநிட்ஸ், சேர் ஜோன் வூட் றொவ், A.A. மக்டொனால்ட் போன்ற மேலைத்தேச இந்தியவியல் ஆய்வாளர்களின் வகிபங்கு அளப்பரியதாகும. பத்தொன்பதாம் நூற்றாண்டில் "இந்தியவியல்" (னெழடழபல) தொடர்பான ஆய்வுகளில் அனக மேலைத்தேச அறிஞர்கள் முனைப்போடு ஈடுபட்டிருந்தனர். இவர்களிற் பலர் புராதன இந்தியப் பண்பாட்டினைச் சமயவியல் நோக்கிலும் தத்துவார்த்த நோக்கிலும்

தரிசிக்க முனைந்து கொண்டிருந்தனர். ஆனால் கோல்புறூக் அவர்களோ இவர்கள் யாவரிடமிருந்தும் சற்று வேறுபட்ட கோணத்தில் சிந்தித்தார்.

இவர் புராதன இந்தியப் பண்பாட்டினை அறிவியல் நேர்க்கிலும் அரசியல் மற்றும் நீதி பரிபாலனவியற் தளத்திலிருந்தும் ஆராய முற்பட்டார். இதன் விளைவாக இந்துக்களின் புராதன பனுவல்களும் அவற்றின் சிந்தனை மரபுகளும் சமய—மெய்பியல் மற்றும் ஆன்மீகத் தளங்களுக்கு மட்டுமே பொருத்தமுயையவை. நவீன உலகியல் நடைமுறைகளுக்குப் பொருத்தமான அறிவியல் அணுகுமுறைகளினை அவற்றில் எதிர்பார்க்க இயலாது என்கிற மேலைத்தேசத்தவரின் தவறான எண்ணக்கருவாக்கத்தினை நிர்மூலமாக்கிய பெருமை ர்.வு. கோல்புறூக் அவர்களையே சாரும்.

### வரலாற்றுக் குறிப்புகள்

பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியில் மிகுந்த செல்வாக்குகளை பெற்றோருக்கு 1765இல் H.T. கோல்புறூக் மகனாகப் பிறந்தார்... இவருடைய தந்தையாரான ஞுசை ஜோர்ஜ்கோல்புறூக் அவர்கள் 1769ஆம் ஆண்டில் கிழகிந்திய வர்த்தகக் கம்பனியின் தலைமை நிர்வாக சபையின் பிரதம அதிகாரியாக விளங்கியமையும் குறிப்பிடற்பாலது. மிக இளவயதிலிருந்தே கல்வி பற்றியும் ஆர்வமும் தீவிர முயற்சியும் H.T. கோல்புறூக்கிடம் நிறைந்திருந்தது.

தந்தையாருடைய வேலைகளின் நிமித்தம் கோல்புறூக்கின் இடைநிலைக் கல்வியானது பாடசாலையூடானதாக அன்றி பிரத்தியேகமான கல்விப்போதனை மூலமே மேற்கொள்ளப்பட்டது. இவ்விதத்தில் குறிப்பாகத் தொசீர்மொழிகள் ஊடயளளவீஉயட டுயபெரயபநள)இ பிரஞ்ச், ஜேர்மன், மொழிகள் மற்றும் கணிதம் ஆகியவற்றில் கோல்புறூக் மிகுந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

இவர் பற்றி ஹெய்மன் என்ற அறிஞர் குறிப்பிடும்போது "Colebrooke at the age of 17 possessed as much of a knowledge as might be expected of a graduate of a University எனக் குறிப்பிடுவது நோக்கற்பாலது. அந்தவகையில் பதினேழு வயதிலேயே ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரிக்கு இருக்க வேண்டிய அறிவுப் புலமை வாய்க்கப் பெற்றிருந்து கோல்புறூக் இளவயதில் சமயப்பற்று மிகுந்தவராயிருந்தார். ஆத்மீக ஈடுபாட்டின் மிகுதியால் உலகியல் நாட்டமற்றவராயிருந்த இவரை இவருடைய தந்தையார் திசைமாற்ற எண்ணி இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்.

ஆரம்பத்தில் வங்காளத்தில் பரித்தானிய அரசின் குடியியற்சேவையில் (Civil Service) எழுதனராகப் பதவி வகித்த கோல்புறூக் சற்று தர்மசங்கடமான மனோபாவத்தில் இருந்தார். கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிலன் உயர்நிலைப் பிரமுகராக விளங்கிய இவர் அரச குடியியற் சேவையில் இடைநிலைப் பதிவியொன்றினை வகிக்க வேண்டி ஏற்பட்ட நிர்பந்தமே இதற்குபக் காரணமாகும்.

எவ்வாறயிளும் மிக விரைவில் "திர்ஹத்" (Tirhat) என்ற இடத்திற்கு உதவி வரமுலீன வரிசேகரிப்பாளராக (Assistant Collector of Revenue) நியமனம் பெற்றுக் கொண்ட கோல்புறூக் அங்கே ஒன்பது வருடங்கள் பணியாற்றினார்.

இக்கால கட்டங்களில் H.T. கோல்புறூக் இந்தியவியல் ஆய்வுகள் பற்றி எதுவித சிரத்தையும் கொள்ளவில்லை மாறாக சாளஸ் வில்கின்ஸன் போன்ற

இந்தியவியலாய்வார்களை சமஸ்கிருதப் பைத்தியங்கள் (Sanskrit Mads) என்றும் "Asiatic Miscellany" என்ற ஆசியக்கழகத்தின் புகழ் பெற்ற ஆய்வுக் கட்டுரைத் திரட்டை அபத்தக் களஞ்சியம் (Repository of non-sense) எள்ளி நகையாடியிருந்தார்.

**கருத்தியல் மாற்றமும் மனமாற்றமும்**

இந்தியர்கள் மீதும் இந்தியப் பண்பாட்டின் மீதும் கோல்புறூக்கின் கவனம் திரும்புவதற்கான தருணம் 1789இல் வாய்த்தது. "புனே" யில் வருமான வரிசேகரிப்பாளராக 178ழஇில் இவர் நியமிக்கப்ட்டார். அதன் தொடர்ச்சியாக வங்காள மக்கள் எதிர்நோக்கும் "நிரந்தர குடியேற்றம்" தொடர்பிலான பிரச்சினை தொடர்பில் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. தனது அவதானிப்புகளையம். வுஜீசாரணை செய்து பெறப்பட்ட விடயங்களையும் வெறுமமே அறிக்கை அளிப்பதோடு மட்டுப்படுத்திக் கொள்ளாத கோல்புறூக் இவற்றினைத் தொகுத்து வங்களாத்தின் விவசாயம் (Agriculture of Bengal) என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். இந்தியர்கள் மீதும் இந்தியப் பண்பாட்டினை மீதும் கோல்புறூக்கிற்கு பேரபிமானம் வளர்வதற்கு இதுவே அடிப்படையாயிற்று. பிரித்தானியக் காலனித்துவக் கொள்கையகளால் இந்தியச் சுதேசப் பொருளதாரம் எவ்வாறு சுரண்டபப்படுகின்றது என்பதனை குறித்த நூலில் மிக்த் துணிச்சலாகக் கொல்புறூக் வெளிக் கொணர்ந்திருந்தார். பிரித்தானிய ரெசின் ஊழியனாக இருந்தபோதும் வ்ங்காளத்தின் அனேக குடிசைக் கைத்தொழில்கள் நலிவடைந்து போவதற்கும் மக்கள் பட்டினியால் வாடுவதற்கும் பிரித்தானியக் காலனித்துவக் கொள்கைகளே காரணம் என்பதனைத் துணிந்து கூறிய கோலபுறூக் "பருத்தி நெசவு" தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் தற்கால இந்தியப் பொருளதார வல்லுனர்களாலும் பெரிதும் பாராட்டப்படுகின்றவையாக உள்ளன.

இந்திய ஏழை விவசாயிகளிடத்தில் கோலபுறூக் கொண்டிருந்த அனுதாபம் இந்தியர்களை நிர்வகிப்பதற்கு உகந்த பொறிமுறையொன்றினை இந்தியப் பண்பாட்டு மரபுகளுக்குள்ளிருந்தே வெளிக் கொணர்வதன் அவசியம் பற்றிச் சிந்திப்பதற்குத் தூண்டியது.

புராதன .இந்து அரசியற் பனுவல்களையும் இந்துச்சட்டம் மதற்றும் நீதிபரிபாலன நடைமுறைகளையும் பற்றிக் கேள்வியுற்ற கோல்புறூக் அவற்றை ஆழமாகக் கற்பதில் நாட்டங் கொண்டார். இதற்குச் சம்ஸ்கிருதமொழியை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதனை உணர்ந்து கொண்டார். ஏற்கனவே இரண்டு தடவைகள் சம்ஸ்கிருதத்தைக் கற்க முற்பட்டு அம்முயற்சியினைக் கைவிட்டிருந்து கோல்புறூக் தற்பொழுது குறித்த நோக்கத்தினை எய்தும் உந்துதலோடு மூன்றாவது முறையாகக் கற்கத் தொடங்கி அதில் பெரும் வெற்றி பெற்றார்.

**இந்து சட்டக்கோவை தயாரிப்பு**

இந்திய அரசியல் மற்றும் நிதிபரிபாலன முறைமையின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மடைமாற்றாக அமைந்தது. "A Digest of Hindu Law on contracts and Successions". என்ற புகழ் பெற்ற இந்துச் சொத்துரிமைச் சட்டம் தொடர்பிலான பனுவலாகும். இது 1798இல் மூன்று பாகங்களைக் கோல்புறுஸக்கினால் எழதப்பட்டது. புராதன இந்துநாகரிக மரபின் தர்மசாஸ்திரங்களையும் அர்த்தசாஸ்திரம், சுக்கிரநீதி, காமாண்டக

நீதிசாரம் முதலிய பிற நீதிப்பனுவல்களையும் உள்வாங்கி பொருத்தமான சந்தர்ப்பங்களில் அவற்றின் மூலபாடங்களை (சம்ஸ்கிருத மொழியில்) ஆங்கில மொழி பெயர்ப்புக்களுடன் பிரேரித்துக் கட்டமைக்கப்பட்ட இப்பனுவற்றிரட்டு இந்து நாகரிகத்துக்குக் கோல்புறூக்கினால் செய்யப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பாகும். சம்ஸ்கிருதத்தில் தேர்ந்த புலமைத்துவம் கொண்ட பண்டிதர்களின் துணையுடன் கோல்புறூக் இப்பெருமுயற்சியில் வெற்றி பெற்றிருந்தார். புராதன இந்துக்களிடம் நிழபுணத்துவம் வாய்ந்த ராஜ்ய நிர்வாகப் பொறிமுறையும் சட்டப் பனுவல்களும் இருந்தமை பற்றி மேலைத்தேச அறிவுலகம் அறிந்து கொள்வதற்கான முதல் எத்தனமும் இதுவேயாகும்.

### சம்ஸ்கிருதப் பாண்டித்தயமும் பதிப்பு முயற்சிகளும்

1801ஆம்ஆண்டில் கோலபுறூக் கல்கத்தாவிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அக்காலப் பகுதியில் பிரதம நீதியரசர் பதவி என்பதுதற்காலத்திலும் பார்க்க ஓய்வுநேரம் சற்று அதிகம் கிடைக்கக்கூடிய பதவியாக இருந்தது. இவ்வொய்வு நேரத்தினைக் கோலபுறூக் இந்திய குடியியல் சேவை ஊழியர்களுக்காக Fort William (வில்லியம் கோட்டை) எனும் இடத்தில் நிறுவப்பட்டிருந்த கல்லூரியில் சம்ஸ்கிருத பேராசிரியராக ஊதியமின்றிக் கடமையாற்றினார். இந்திய மக்களை நிர்வகிக்கும் பதவிகளிலுள்ளவர்களுக்கு புராதன இந்தியர்களின் நிர்வாகக்கலை பற்றிய அறிவு அவசியமானதாகும். இந்த அறிவைப் பெறுவதற்கு சம்ஸ்கிருதமொழி ஒரு கருவியாகும் என்கிற அடிப்படையில் கோல்புறூக் கற்பிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

இம்முயற்சியின் தொடர்ச்சியாக சுவடிகளில் இருந்த அரிய சம்ஸ்கிருதப் பனுவல்கள் சிலவற்றைப் பதிப்பிக்கும் முயற்சியிலும் கோல்புறூக் ஆர்வங்காட்டினார். அந்த வகையில் 1804இல் ஹிதோபதேசத்தினை பதிப்பித்தார். 1808இல் அமரகோசம் எனும் புகழ் பெற்ற சம்ஸ்கிருத நிகண்டைப் பதிப்பித்து வெளியிட்டார்.

### இந்து சொத்துரிமைச் சட்டத்தின் விரிவாக்கம்

கோல்புறூக் 1805இல் (Supreme Council) அங்கத்தவராகப் பதிவியுயர்வு பெற்றார். தமது பிரதம நீதியரசர் பதிவியினை அழுக்காமலே ஐந்து ஆண்டுகள் இவ்வங்கத்துவத்தினைப் பெற்றிருந்த கோல்புறூக் 1810இல் Supreme Council அங்கத்துவத்திலிருந்து விலகித் தனது மேலதிகமான ஓய்வு நேரத்தினை நூலாய்வு முயற்சிகளில் செலவிட்டார்;. குறிப்பாக ஜுமுதவாகனர் என்பவரால் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தாயபாகம், வியவகார மாத்ருகா ஆகிய இரண்டு சட்டப்புனவல்கள் வங்காள இந்து சமுதாயத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவையாகத் திகழ்ந்தன. குறிப்பாகத் தாயபாகம் சொத்துரிமை பற்றிய ஆழமாக விவாதிக்கிறது. புரம்பதையுரிமை, பிரிவுபங்கீடு, சீதனம், பெண்கள் சொத்துரிமை தொடர்பில் இப்பனுவலில் எடுத்தாளப்பட்டுள்ள விடயங்கள் வங்காள இந்து சமுதாயத்தில் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தன. மேலும் கோல்புறூக் வங்காள சமுதாயத்தினரிடையே வழங்கும் குடியியல் சட்ட நடைமுறைகள் தொடர்பில் தனது ஆய்வினை விரிவுப்படுத்தினார்.

Hindu Law of Inheritance என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட பனுவலில் கோல்புறூக் வங்காள மக்களிடையே சொத்துரிமை தொடர்பிலான வழக்குகளில்

அதிக செல்வாக்குச் செலுத்திய தாயபாகத்தையும், மிதாச்சாரத்தையும் பகுப்பாய்வு செய்து விளக்கியுள்ளமை நோக்கற்பாலது.

Rocher & Ludo, 2011:25

**இந்து அறிவியல்**

இந்து சாஸ்திரங்கில் வழபாட்டுச் சடங்களும் த்ததுவார்த்த விடயங்களும் மட்டுமின்றி அட்சரபணிதம், எண்கணிதம், வானியல் என அறிவியல் சார்ந்த கருத்தியல்களும் துலங்கியிருந்தன என்பதனை முதன்முதலில் அதிகாரபூர்வமான புலமையோடு மேலைத்தேசப் புத்திஜீவிகளுக்கு எடுத்துரைத்த பெருமையும் கோல்புறூக்கையே சாரும்.

"Colebrook was the first European writer who thoroughly inquired ito the subject of Hindu alegbra, Arithmetic and Astronomy with the confidence and authority of an erudite Sanskrit Scholar"

Eminent Orientalists, 1991:57

கோல்புறூக் 1817இல் எழுதிய Algebra with Arithmetic and Mensuration from the Sanskrit of Btahmegupt and Bhascara என்ற ஆய்வுக் கட்டுரையானது 19ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இந்துக்களின் கணிதவியல் தொடர்பிலான முதல்நிலை ஆய்வாகக் கருத்ப்படுகிறது. இந்நூலில் கோல்புறூக் இந்துக்களின் அட்சர கணிதம் எண் கணிதம் வானியல் சார்ந்த பனவல்களான முதலாம் ஆரியபட்பட்டரின் ஆரியப்பட்டீயம், வராஹமிஹிரரின் பிருஹத்சம்ஹிதை, பஞ்சசத்தாந்தம், பிரம்மருப்தரின் ஸ்புடசித்தாந்தம் மற்றும் பிற்காலத்தில் தோன்றிய (கி.பி. 12) சித்தாந்த சிரோமணி மற்றும் லீலாவதி (இவை பாஸ்கராச்சரியாரின் ஆக்கங்கள்) ஆகியவற்றின் கருத்துக்களை உள்வாங்கி எழுதப்பட்ட மிகச்சிறந்த ஆய்வுக்கட்டுரையாக வெளிவந்தது. மேலும் கோல்புறூக் பாஸ்கராச்சாரியரின் பீஜ கணிதம் மற்றும் லீலாவதி ஆகிய கணிதப்பனுவல்களை நேரடியாகவே மொழி பெயர்த்திருந்தமையும் இந்து அறிவியல் பற்றி ஆய்வு செய்த பிற்கால ஆய்வாள்ர்க்குப் பெரிதும் வழித்துணையாயிற்று. இவ்விரு பனுவல்களும் முறையே அட்சரகணிதம் மற்றும் எண்கணிதம் ஆகியவற்றின் விடயப்பரப்புக்களை கொண்டவை

உலக அறிவியல் வரலாற்றில் கிரேக்கர்களை விடவும் இந்துக்களே புகழ்பூத்த வரலாற்றுத் தொன்மைக்கும் சீர்மைக்கும் உரித்துடையவர்கள் என்பதனைத் தயங்காது எடுத்துரைத்த முதல் மேலைநாட்டு ஆய்வாளரும் கோல்புறூக்கேயாவார்.

"The Hindu had certainly made distinguished progress in the science so early as the century immediately following that in which the Grecians taught the rudiments of it. The Hindus had the benefit of a good arithmetical notation, the Greeks, the dis-advantage of a bad one. Nearly allied as alegebric calculus was more easy and natural where arithmetic was best handled. No such marked identity of the Hindu and dio phative systems is observed as to demonstrate communication. They are sufficiently distinct to justify the Presumption that both might be invented independently of each other…"

Higginbothom, J.J. 1874:32

அதாவது கிரேக்கர்கள் கணிதத்தின் அடிப்படைகளைப் பயிற்றுவிக்கத் தொடங்கிய அடுத்த நூற்றாண்டிலேயே இந்துக்கள் கணித அறிவியலில் அவர்களை விஞ்சிய முளனேற்றத்தினை அடைந்து விட்டார்கள். இந்துக்களுக்கான இலக்கப் பயன்பாட்டு முறை (எண்கணிதக் குறியீடுகள்) கிரேக்கர்களை விடவும் முன்னேற்றகரமானதாக இருந்தமையால் அட்சரகணித்ததிலும் கணிப்பீடுகளைப் புகுத்துவதில் இந்துக்களிற்கு இலகுவாயிற்று. (ஏனெனில் அட்சரகணிதமும் எண் கணிதத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகையால்) கிரேக்கர்களால் கண்டறியப்பட்டதாகப் பலர் கருதும் டயோபன்ரைன் எனப்படும் அட்சரகணிதத்தின் திர்;வுதராச் சமன்பாடுகள் குறித்தும் அவற்றைத் தீலீக்கின்ற வழிமுறைகள் குறித்தும் கிரேக்கர்களைப் போன்று இந்துக்களும் அறிவு பெற்றவர்களாக விளங்கியிருநதனர்.. இந்தயப் பண்பாடும் தத்தமக்கேயுரிய சுயாதீனததன்மையுடன் கணித அறிவியலில் வளம் பெற்றிருந்தனவேயன்றி கிரேக்கர்களாலும் அலக்சாண்டரின் படையெடுப்பினாலுமே இந்தியர்கள் கிணதவியலின் செழுமைகளை அறிந்திருந்தனர் என்ற விவாதம் தவறானதாகும். இதனை கோலபுறூக் தனத குறித்த ஆய்வுக் கட்டுரையில் தெளிவாக விளக்கியிருந்தார்.

இந்திய அறிவயற் புலங்களில் வானியல் (Astronomy) தொடர்பிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த கோல்புறூக் இந்தியாவில் Roya Astronomical Society (வானியற் கழகம்)இன் ஸ்தாபன உறுப்பினர்களில் ஒருவராக விளங்குகிறார். 1824 இக் கழகத்தின் தலைவர் பதவியையும் அலங்கரித்தார். மேலும் Asiatic Researches சஞ்சிகைக்கு இவர் சமர்பித்த "Indian and Arabian Division of Zodiac and Hindu Astronomy" இந்திய மற்றும் அரேபிய இராசிமண்டலப் பகுப்புகள் மற்றும் இந்து வானியல் என்ற தலைப்பிலமைந்த ஆய்வுக் கட்டுரையினூடாக வானியல் சார்ந்த பண்பாட்டிடை ஆய்வுகளில் (Cross Cultural Researches) தனக்கிருந்த புலமைத்துவத்தினை நிருபித்துள்ளார்.

**சமயப் பரிவுகள் பற்றிய ஆய்வுகள்**

இந்தியவியல் மற்றும் கீழைத் தேசவியல் தொடர்பிலான ஆய்வாளர்களை புதிய பரிமாணங்களை நோக்கி ஆற்றுப்படுத்தியனவாக அமைந்தவை கோல்புறூக்கால் மேற்கொள்ளப்பட்ட சிறுசமயப்பிரிவுகள் தொடர்ப்ஜீலான ஆய்வுக் கட்டுரைகளாகும். சார்வாகர்கள், பாசுகதர்கள், மகேஸ்வரர்கள், பஞ்சராத்திராகள் ஆகிய சிறு சமயப்பிரிவினர்கள் பற்றிய கோல்புறூக்கின் ஆய்வுக் கட்டுரைகள் இவ்வகையில் குறிப்பிடற்பாலன. இவற்றுள் சார்வாகர்கள் அவைநீக பிரிவினராகும் பாஞ்சராத்திரர்கள் வைணவத்தின் கிளை நெறியாகும். ஏனைய இரண்டும் வைசத்தின் உட்பரிவு நெறிகளாகும்.

கேர்புறூக்கின் இவ்வாய்வுகள் கீழைத்தேயவியல் ஆர்வலர்களை இந்திய மக்களின் சமய வரலாற்றின் ஒரு புதிய ஆய்வுப்புலத்தினை நோக்கி இட்டுச் சென்றராக டீரஉமடயனெ என்பவர் கருத்துரைத்துளள்மை நோக்கற்பாலது.

"Colebrooke's action of the minor sects the carvakas and localaticas, Maheswaras and Pasupatas, the Panchararos or Bhagavatas led oriental Scholars to a new branch of research in the religious history of the Indian people".

Buckland C.E. 1952:24

இந்தியாவில் (Indology) மற்றும் கீழைத்தேசவியல் (oriental studies) சார்ந்த ஆய்வுகளில் கோல்புறாக்கின் வகிபங்கு அளப்பரியது. குறி;ப்பாக புராதன இந்துக் கணிதவியல். வானியல் சார்ந்த ஆய்வுகளுக்கும் அளப்பரியது. குறிப்பாக புராதன இந்துக் கணிதவியல், வானியல் சார்ந்த ஆய்வுகளுக்கும் புராதன இந்து அரசியல் சட்டம் நிதிபதிபாலனம் தொடர்பிலான ஆய்வுகளுக்கும் இவரே பிதாமகனாவார். குறித்த துறைசார்ந்த மூலபாடங்களுக்கான இவருடைய மொழிபெயர்ப்புக்களும் ஆய்வுலகில் மிகுந்த கவனத்தையீர்ப்பவையாகத் திகழ்கின்றன. Miscellaneous Eassays (நானாவிதக் கட்டுரைகள்) என்ற தலைப்பில் இரண்டு பகுதிகளாக வெளிவந்த தொகுப்பில் இவரெழுதிய ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொர்குப்பில் இடம்பெறும் ஆய்வுக்கட்டுரைகளிற் பெரும்பாலானவை Asiatic Society எனப்படும் ஆசியக் கழகத்தின் நடைபெற்ற கருத்தரங்கில் அளிக்கை செய்யப்பட்டவையாகும். 1784இல் சேர் வில்லியம்ஸ் ஜோன்ஸினால் வங்காளத்தில்; ஸ்தாபிக்கப்பட்ட Asiatic Society எனப்படும் ஆசியக்கழகத்தின் ஸ்தாபிதமானது கிழைத்தேசவியல் மற்றும் இந்தியவியல் சார்ந்;த அறிவுப் பரம்பலக்கான முக்கிய மடைமாற்றமாகக் கருதப்படுகிறது. இங்கு நடைபெற்ற கருத்தாடல்களினால் இந்தியர்களின் தொன்மைப் பண்பாட்டின் செழுமை துலக்கமானது. ஆங்கிலங்கற்ற படித்த இந்தியச் சுதேசிகளுக்கு தமது பாரம்பரிய பொற்காலங்களின் பெருமையினை உணர்வதற்கான நல்லறிவுச்சுடர் கொளுத்தலாகவும் இக்கழகத்தில் நிகழ்நத கருத்தாடல்களும் அறிவோர் ஆய்வுரைகளும் அமைந்தன. இத்தகைய சிறப்புமிக்க ஆசியக் கழகத்தின் தலைவராகவம் H.T. கோலபுறாக் அவர்கள் பணியாற்றியுள்ளார் என்பதும் இங்கே குறிப்பிடற்பாலதாகும். 1823இல் Mis எனப் பெயர்மாற்றப்பட்டிருந்த ஆசியக் கழகத்தின் தலைவர் பதவியினை H.T. கோல்புறாக் வகித்திருந்தார்.

இந்தியவியல் சார்ந்த ஆய்வுகளில் அரசியல் சட்டம் மற்றும் அறிவியல் சார்ந்த பொருண்மைகளைத் துலக்கி மேலைத் தேசப் புத்திஜீவிகளை ஆச்சரியத்திலாழ்த்திய பாங்கு கோல்புறாக்கி தனிச்சிறப்பாகும். இவருடைய ஆய்வு முயற்சிகள் மட்டும் அற்றுப் போயிருப்பின் இந்து நாகரிக வரலாறு வெறுமனே புரிந்து சமயசடங்கியலின் வரலாறவே உலக அரங்கில் கொள்ளப்பட்டிருக்கும்